# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம்
## (கூட்டிணைத்தல்)

**இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனத்தைக்**
**கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திலங்க சுமதிபால*
*அவர்களால் 2013, யூலை மாதம் 11 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

*(2013, யூன் மாதம் 17 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **256 ஆம் சட்டமூலம்** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 007429 - 350 (2013/07)

# இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்)

## இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

''இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சம்மேளனமொன்று அதன் உறப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட சம்மேளனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சம்மேளனம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகால வரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''சம்மேளனம்'' என குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம்'' என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் அது பொது இலச்சினையொன்றைவைத் திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) 1982 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 21இன் கீழ் 2003 மாச்சு 25 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டதும் அதன்பின்னர் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் 3 ஆம் திகதி மீள்பதிவு செய்யப்பட்டதுமான இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனத்தின் செயற்பாடுகளையும் தொழிற்பாடுகளையும் பொறுப்புக்களையும் பொறுப்பேற்றல் ;

(ஆ) தேசிய நிர்மாணக் கைத்தொழிலை மேம்படுத்தலும் பாதுகாத்தலும், அதன் அக்கறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் நிர்மாணச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களின் அபிப்பிராயங்களை தெரிவித்தல் ;

(இ) தேசிய முக்கியத்துவம்வாய்ந்த விடயங்களில் தேசிய, நியதிச்சட்ட மற்றும் சட்டவாக்கக் குழுமங்களால் கலந்தாராய்வதற்கு தேசிய நிர்மாணக் கைத்தொழிலுக்கு விசேட குழுமமாகச் செயலாற்றுதல் ;

(ஈ) தேசிய நிர்மாணக் கைத்தொழிலின் அபிவிருத்தியைத் தூண்டி எல்லா நேரங்களிலும் அது அரச அதிகார சபைகளினால் அங்கீகரிக்கப்படுவதற்கு ஏதுவாக இருத்தல் ;

(உ) தேசிய முக்கியத்துவம்வாய்ந்த விடயங்களை ஆராய்வதற்கும் அரசின் ஊடாக அவை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு விதப்புரைகளை மேற்கொள்வதற்கும் தேசிய நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஒரு மன்றத்தை ஏற்பாடு செய்தல் ;

(ஊ) தேசிய நிர்மாணக் கைத்தொழிலில் தொழிலாண்மை மிக்கவர்களின் குழுவொன்றைத் தாபித்தல் மற்றும் கருத்திட்டங்களிலும் அதிலிருந்து எழும் சர்ச்சைகளைத் தீர்ப்பதிலும் மதிப்பீடுசெய்து அறிக்கைகளையும் சான்றிதழ்களையும் வழங்கும் அதேவேளை உறுப்பினர்களுக்கு உதவுதலும் சம்மேளனத்தின் நிதியத்துக்குப் பங்களிப்பை மேற்கொள்ளுதலும் ;

(எ) அதன் சொந்த வளங்களைப் பயன்படுத்தி அல்லது வெளிநாட்டு நிதியிடப்பட்ட புலமைப்பரிசில்கள்/ தோழமை ஊடாக தேசிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதுடன் நிர்மாணக் கைத்தொழிலில் தொழில்களை மேற்கொள்வதற்கு தகுதியுள்ளவர்களுக்கு உதவுவதால் சம்மேளனம் அத்தகைய நோக்கங்களுக்காக பங்களிப்புச் செய்யப்படும் அல்லது நன்கொடை அளிக்கப்படும் நிதிகளின் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பாதுகாவலராகவும் நம்பிக்கைப்பொறுப்பாளராக அல்லது முகாமையாளராகவும் செயலாற்றும். அத்துடன் அது இலவசமாக அல்லது வேறுவிதமாக சம்மேளனம் விரும்பும் ஏனைய குறிக்கோள்களுக்கு இசைவான ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புகளை அது நிறைவேற்றுவதற்கு பொறுப்பேற்கும் ;

(ஏ) கைத்தொழில் தொடர்பான கற்கைநெறிகளில் பயிற்சிகளையும் பரீட்சைகளையும் நடாத்தி அவற்றுக்கான சான்றிதழ்களை வழங்குதல் ;

(ஐ) தேசிய நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தாபனங்களுக்கான ஆட்சேர்ப்பு நிலையமாகச் செயலாற்றுதல் ; அத்துடன்

(ஒ) சம்மேளனத்தின் ஒரு அங்கமாக அதன் உறுப்பினர்களுக்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஒப்பந்தங்களைப் பெறுவதற்கு குவிமையம் செலுத்தும் ஒரு துணை நிறுவனக் குழுமத்தை அல்லது குழுமங்களைத் தாபித்து அதன் குறிக்கோள்களை அடைவதற்கு ஏதேனும் செயற்பாடுகளை அல்லது சேவைகளை நடத்துவதற்கு அத்தகைய துணை நிறுவனங்களுக்கு வலுவூட்டுதல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய, பதவிதாங்குநர்களையும், அவ்விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டு அதற்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்களுமான செயலாளர் நாயகம் உட்பட பிரதான நிறைவேற்று அதிகாரியின் தலைமையில் முகாமைத்துவச் சபை ஒன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்று அதிகாரிகளும் முகாமைச் சபையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவிவகித்தவர்களை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வோர் தொழிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளில் குறித்துரைக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.**

**5**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக் கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

**கூட்டுத்தாபனத்தின் விதிகள்.**

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் அல்லது விசேட பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் பெரும்பான்மைகொண்டு, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்தலும் என்பவற்றுக்காக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் நிறுவகத்தின் விதிகள், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கட்டணங்களை அறவிடுவதற்கான தத்துவம்.*

**7**. கூட்டுத்தாபனம் தமது உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென கருதப்படும் அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணங்கள், சந்தாப்பணங்கள், தண்டப்பணங்கள், உதவுதொகைகள் அல்லது நுழைவுக்கட்டணங்கள் ஆகிய கட்டணங்களை அறவிடுவதற்கு சட்டரீதியான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, இறுதிவிருப்பாவணம், நன்கொடை, அறுதி, சந்தாப்பணங்கள் அல்லது கட்டணங்கள் என்றவகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் முகாமையாளர் சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனம் எந்தவகையில் பெறப்பட்டாலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இலாபத்தின் பகுதியாகவோ மிகையூதியம் என்றவகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**9.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, எடுக்கவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்து மாற்ற, வில்லங்கத்துக்குட்படுத்த அல்லது பொறுப்பிக்கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரினால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய உறுப்பாண்மைத் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*சம்மேளனத்தினால் செலுத்தப்படற்பாலனவும் சம்மேளனத்திற்குச் செலுத்தப்படவுள்ளதுமான கடன்கள் மற்றும் கலைப்பின்போது எஞ்சியுள்ள ஆதனம்.*

**11.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சம்மேளனத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திகதியன்று சம்மேளனத்திற்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவு தொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும் ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.**

***12.*** *(1)* கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு ஏப்பிறல் 1 ஆம் திகதி முதல் அடுத்துவரும் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி வரை யாதல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செல வினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாப னத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சம்மேளனத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரி னால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

*(4)* இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காள ரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனி யாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து. அத்தகைய நிறுவகத் தினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவு முள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டாத நிறுவனமாக விருத்தல் வேண்டும்.**

***13.*** எவ்வகையிலேனும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணங்களும் ஆதனங்களும் இதன்கண் எடுத்துக்கூறப் பட்ட அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் எப்பாகமும் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பங்கிலாபம், கடன், மிகையூதியம் என்றவகையாக அல்லது இலாபம் என்றவகையாக எவ்விதத்திலேனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றை தடைசெய்தலாகாது :-

(அ) கூட்டுத்தாபனத்துக்கு ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காகக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு நல்லெண்ணத்துடன் நியாயமானதும் தகுந்தளவுமான ஊதியத்தைக் கொடுப்பனவு செய்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால் அல்லது கூட்டுத்தாபன உறுப்பினரொருவர் பங்குதாரராகவுள்ள ஏதேனும் கம்பெனியாள் கூட்டுத்தாபனத்துக்கு வாடகைக்கு விடப்பட்ட வளவுக்கு நியாயமானதும் தகுந்ததுமான வாடகையைக் கொடுப்பனவு செய்தல் ; அத்துடன்

(இ) தமது பணிகளை அல்லது கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது புரிவதில் அல்லது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் எவராலும் முகாமைச் சபையின் முன் அங்கீகாரத்துடன் உறப்பட்ட நியாயமானதும் தகுந்ததுமான செலவுகளைத் திருப்பிக் கொடுத்தல் அல்லது மீளக் கொடுப்பனவு செய்தல்.

**14**. கூட்டுத்தாபனத்தின் இலட்சினையானது அதிகாரி ஒருவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி/செயலாளர் நாயகத்தின் முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதலும் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

குடியரசினதும் ஏணையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**15**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**16**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்